**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022 ம் வருடம் ஜீன் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை
**அ.வ.எண்.133/2021 இல் இ.ம.எண்.02/2021**

1.கவிதா
2.லலிதாமணி ... மனுதாரர்கள் /வாதிகள்

/ எதிர் /

1.சகுந்தலா
2.செல்வராஜ்
3.பத்மாவதி
4.பங்கஜம் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 27.04.2022 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

தாவா வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவ உரிமையையும், மேற்படி வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகள் விவசாய விளைபொருட்களையும், உரங்களையும் எடுத்து செல்வதையும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும்

பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ளது. மனுதாரர்கள் / வாதிகள் இருவரும் சகோதரிகள் என்ற நிலையில் அவர்கள் சின்னசாமி என்பவரின் மகள்கள். வாதிகளின் தகப்பனாரும், வாதிகளும், அவர்களது சகோதரரான ஜெயக்குமார் என்பவரும் 14.12.2020 ம் தேதியில் பாகம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் R.S.No.322/1 ல் கட்டுப்பட்ட 4.05 ஏக்கர் சொத்து மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி R.S.No.322/1 ல் கட்டுப்பட்ட 4.50 ஏக்கர் சொத்தும் அதனுடன் இணைந்த வண்டித்தடமும் தான் தாவா சொத்து. மேற்படி தாவா சொத்தினை 01.09.1995 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி வாதிகளின் தகப்பனரான P.N.சின்னச்சாமி என்பவர் கிரையம் பெற்றுள்ள நிலையில் மேற்படி கிரைய ஆவணத்தில் மேற்படி பூமிக்குண்டான மாமூல் வண்டித்தடங்களிலும், நடதடங்களிலும் உங்களுடைய வண்டி கால்நடை, ஜனங்கள், கோட்டேர் வாகனங்கள் வகையறா போக்குவரத்து செய்து கொள்ளும் வண்டித்தடம், நடதடம் பாத்தியங்களும் மாமூல்படி கட்டுப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வசதியுரிமை ரூ.250/- என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. R.S.No.322/1 ல் கட்டுப்பட்ட சொத்தினை அடைவதற்கு 13 அடி அகலத்தில் தென்வடலாக, கிழமேல் இட்டேரியிலிருந்து R.S.No.255 ன் வழியாக தென்வடலாக R.S.No.255 மற்றும் R.S.No.254 ன் வழியாக

4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட R.S.No.254 ஐ வண்டித்தடம் சென்றடைகிறது. R.S.No.255 மற்றும் R.S.No.254 ன் ஒரு பகுதி 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மகனான ரமேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் மேற்படி ரமேஷ் வெளிநாட்டில் பணிபுரிந்து வருவதால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி பராமரித்து வருகிறார். மேற்படி வண்டித்தடமானது 4ம் எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதியின் சொத்தினை சென்றடையக்கூடிய வழித்தடமாகும். மேற்படி வண்டித்தடம் 50 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள நிலையில் மனுதாரர்கள் / வாதிகளாலும், அவர்களது தகப்பனாராலும், முன்பாத்தியஸ்தர்களாலும் தாவா வண்டித்தடம் அனுபவம் செய்யப்பட்டு வந்தது. எனவே, தாவா வண்டித்தடமானது R.S.322 மற்றும் R.S.254 ல் கட்டுப்பட்ட சொத்துக்களுக்குண்டான பழமையான வண்டித்தடமாகும். மனுதாரர்கள் / வாதிகளுக்கும், 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிஏபி வாய்க்காலை பயன்படுத்துவது தொடர்பாக கருத்து வேறுபாடு ஏற்பட்டதின் காரணமாக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாவா வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவத்தினை இடையூறு செய்து வருகின்றனர். 11.11.2020ம் தேதியில் மனுதாரர்கள் / வாதிகள் தாவா வண்டித்தடத்தின் வழியாக டெம்போ வாகனத்தில் உரங்களை ஏற்றி சென்றதை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தடுத்தது சம்மந்தமாக காவல் நிலையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 05.03.2021ம் தேதியில் விவசாய விளைபொருட்களை மனுதாரர்கள் / வாதிகள் வாகனங்களில் எடுத்து சென்றதை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 3 பிரதிவாதிகள் தடுத்ததின் காரணமாக 08.03.2021ம் தேதியில் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் அறிவுறுத்தியபோதிலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அவர்களது செயல்களை மாற்றிக்கொள்ளவில்லை. மாறாக 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி,

மனுதாரர்கள் / வாதிகளுக்கு தாவா வண்டித்தடத்தினை பயன்படுத்துவதற்கு உரிமையில்லை என்று பொய்யான புகாரினை அளித்துள்ளார். தாவா சொத்தான வண்டிப்பாதையை 1ம் மனுதாரர் / 1ம் வாதி தவறாக பயன்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி புகாரில் "1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி எனது மகன் K.ரமேஷ் வெளியூரில் வசித்து வருகிறார். கோமங்கலம்புதூரில் உள்ள அவருக்கு சொந்தமான பூமியில் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம். இந்த பூமிக்கு தென்புறமாக உள்ள C பங்கஜம் என்பவருக்கு பாத்தியப்பட்ட அவர்களது பூமிக்கு எனது மகன் நிலத்தில் தென்வடலாக வண்டித்தடம் பாத்தியமுள்ளது" என்று ஒப்புக்கொண்டுள்ளார். எனவே வண்டித்தடம் நிலையில் உள்ளது என்பது 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதனை மறுத்துரைக்க 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தடைபட்டுள்ளார். 4ம் எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்னரே மனுதாரர்கள் / வாதிகளின் குடும்பத்தினர் தாவா சொத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள். மேலும் தாவா வண்டித்தடத்தினை தவிர தாவா சொத்திற்கு வேறு வண்டித்தடம் எதுவும் இல்லை. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் பிஏபி வாய்க்காலை தவிர்த்து வேறு வண்டித்தடம் உள்ளதாக கூறியுள்ளது தவறானது. பிஏபி தடமானது பிஏபி அதிகாரிகள் ஆய்விற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் தடமாகும். மேற்படி தடமானது சிதலமடைந்துள்ள நிலையில் உள்ளதால் அதன் வழியாக கனரக வாகனங்களின் மூலம் விவசாய விளைபொருட்களையும், உரங்களையும் கொண்டு செல்ல இயலாது. தாவா வண்டித்தடத்தை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக தாவா சொத்தின் வழியாக விவசாய விளைபொருட்களை கொண்டு

செல்ல இயலாத காரணத்தால் பொருட்களை உபயோகப்படுத்த முடியாமல் உபயோகமற்றுள்ளதால் மனுதாரர்கள் / வாதிகளுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மனுதாரர்கள் / வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா வண்டிப்பாதையின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :**

மனுதாரர்கள் / வாதிகளின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / வாதிகளே நிரூபிக்க வேண்டும். தாவா வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்தும் அதனை ஒட்டி அமைந்துள்ள சொத்தும் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை. சர்வே எண்.322/1 காலையில் மனுதாரர்கள் / வாதிகள் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு வண்டித்தடமும் இல்லை. 04.09.1995ம் தேதியிட்ட கிரைய ஆவணத்திலும் தாவா வண்டிப்பாதையைப் பற்றி குறிப்பிடவில்லை. மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரான P.N.சின்னசாமி தாவா வண்டித்தடத்தையும் சேர்த்து தாவா சொத்தினை கிரையம் பெற்றிருக்கும் பட்சத்தில் அது குறித்து நிச்சயமாக கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட வண்டித்தடம் என்பதால் அதில் மனுதாரர்கள் / வாதிகள் எவ்வித உரிமையும் கோர இயலாது. மனுதாரர்கள் / வாதிகள், ரவுடி ஆட்களுடன் வந்து

எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் புதிய வண்டித்தடத்தை ஏற்படுத்த முயற்சி செய்ததை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தடுத்துவிட்டனர். அதனால் பொய்யான சங்கதிகளை கூறி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் / வாதிகள் குறிப்பிடும் வண்டித்தடம் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் வழியாக செல்லும் நிலையில் அதில் ஆவணங்களின் படியோ, வசதியுரிமை படியோ மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. அதுபோல் தாவா வண்டித்தடத்தினை தவிர மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு செல்வதற்கு வேறு வண்டித்தடம் இல்லை என்றும், தாவா வண்டித்தடமானது 50 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதாகவும் கூறியுள்ளது பொய்யானது. அதுபோல் சர்வே எண்.322 மற்றும் 254 ஆகிய பூமிகளில் வண்டித்தடம் செல்வதாக கூறியுள்ளது பொய்யானது. மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆதரவாக முதல்தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் இல்லாத நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) தாவா வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவ உரிமையையும், மேற்படி வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகள் விவசாய விளைபொருட்களையும், உரங்களையும் எடுத்து செல்வதையும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும்,

அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டித்தடத்தினை தவிர வேறு வண்டித்தடம் எதுவும் இல்லாத நிலையில் மேற்படி வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பல வருடங்களாக வசதியுரிமையின்படி பயன்படுத்தி வரும் நிலையில் வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு வசதியுரிமை உள்ளது என்பதால் அதனை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்ய முடியாது என்றும், மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரின் கிரைய ஆவணத்தில் வண்டித்தடத்தினை பயன்படுத்தும் உரிமை வழங்கப்பட்டு அதற்காக வசதியுரிமை மதிப்பும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதி மேற்படி வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்தி வருவதை தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில்

வண்டித்தடத்தினைப் பற்றி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆவணங்களின் அடிப்படையிலோ, வசதியுரிமை அடிப்படையிலோ மனுதாரர்கள் / வாதிகளுக்கு வண்டித்தடத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று கட்சி செய்து வருவதாகவும், ஆனால் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தினை பரிசீலித்தாலே தாவா வண்டித்தடத்தினை தவிர வேறு வண்டித்தடம் மனுதாரர்கள் / வாதிகளின் பூமிகளுக்கு சென்றவடைதற்கு இல்லை என்பது தெளிவாக தெரிய வரும் என்றும், தற்போது மனுதாரர்கள் / வாதிகள் விவசாய பூமிகளிலிருந்து விவசாய விளைபொருட்களை கொண்டு செல்ல இயலாத நிலை ஏற்பட்டு மேற்படி விளைபொருட்களை மனுதாரர்கள் / வாதிகள் நிலத்தில் குவித்து வைத்துள்ளதாகவும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் மேற்படி விபரத்தை தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் எழுந்துள்ளதால் மனுதாரர்கள் / வாதிகள் வண்டித்தடத்தினைப் பொறுத்து கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரத்தை வழங்காவிட்டால் அது மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஈடு செய்ய இயலா இழப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் / வாதிகளுக்கு சர்வே எண்.322/1ல் கட்டுப்பட்ட 4.05 ஏக்கர் பாகப்பிரிவினை பத்திரத்தின்படி பாத்தியப்பட்டிருந்ததாகவும், 04.09.1995ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் மேற்படி வண்டித்தடத்தினைப் பற்றி குறிப்பிடவில்லை என்றும், உண்மையில் மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரான சின்னச்சாமி மேற்படி வண்டித்தடத்துடன் கூடிய சொத்தினை கிரையம் பெற்றிருக்கும் பட்சத்தில் அதன் விபரம் கிரைய ஆவணத்தில்

குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், ஆனால் கிரைய ஆவணத்தில் இல்லாத சங்கதிகளை குறிப்பிட்டு மனுதாரர்கள் / வாதிகள் பாகப்பிரிவினை பத்திரத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும், மனுதாரர்கள் / வாதிகளுக்கு வண்டித்தடத்தில் ஆவணங்களின் அடிப்படையிலோ, வசதியுரிமையின் அடிப்படையிலோ எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் அசல் வழக்கானது நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், அதுபோல் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கு தாவா வண்டித்தடத்திற்கு அருகாமையில் எந்தவொரு சொத்துக்களும் இல்லாத நிலையில் அவர் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றும், தாவா சொத்துக்கள் ஒரு ரமேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ளதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், 1970ம் வருடத்திய பாகப்பிரிவினை பத்திரத்தில் வண்டித்தடம் எதுவும் குறிப்பிடவில்லை என்றும், 1990 மற்றும் 1995ம் வருடத்திய மனுதாரர்கள் / வாதிகளின் ஆவணங்களில் மாமூல் வண்டித்தடம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பதால் மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று வாதிட்டுள்ளார்.

9) இருதரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகளால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா வண்டித்தடத்தினைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இம்மனுவானது அசல் வழக்கு முடிவிற்கு வரும் வரையில் தாவா வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவ உரிமையினை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் / வாதிகள் இருவரும் சின்னச்சாமி என்பவரின் மகள்கள் என்ற நிலையில் மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரான சின்னச்சாமியும், மனுதாரர்கள் / வாதிகளும், அவர்களது சகோதரரான ஜெயக்குமார் என்பவரும் கடந்த 14.12.2020ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தினை ஏற்படுத்திக் கொண்ட போது மேற்படி பாகத்தில் சர்வே எண்.322/1ல் கண்ட 4.05 ஏக்கர் சொத்துக்கள் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி சொத்துக்களுக்கு தாவா வண்டித்தடம் மட்டுமே பாதையாக உள்ள நிலையில் மேற்படி வண்டித்தடமானது R.S.No.322/1ல் கட்டுப்பட்ட சொத்தினை அடைவதற்கு 13 அடி அகலத்தில் தென்வடலாக கிழமேல் இட்டேரியிலிருந்து R.S.No.255ன் வழியாக தென்வடலாக R.S.No.255 மற்றும் R.S.No.254ன் வழியாக 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட R.S.No.254ல் சென்றடைவதாகவும், மேற்படி வண்டித்தடம் செல்லக்கூடிய சர்வே எண்.250 மற்றும் 254 பகுதிகள் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மகனான ரமேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் மேற்படி ரமேஷ் என்பவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வருவதால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி பராமரித்து வரும் நிலையில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகளின் முன்பாத்தியஸ்தர்களும், மனுதாரர்கள் / வாதிகளும் பயன்படுத்தி வருவதை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்து வருவதாகவும், அதன் காரணமாக மனுதாரர்கள் / வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் விளைபொருட்களை மேற்படி வண்டித்தடத்தினை பயன்படுத்தி கொண்டு செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

11) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர்கள் / வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு தாவா வண்டித்தடத்தினை தவிர வேறு

வண்டித்தடம் இல்லை என்று கூறியுள்ளது பொய்யானது என்றும், 1970ம் வருடத்திய பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா வண்டித்தடம் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும், 1995ம் வருத்திய மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரான சின்னச்சாமி என்பவரின் கிரைய ஆவணத்திலும் தாவா வண்டித்தடத்தினைப் பற்றிய விபரம் எதுவும் குறிப்பிடாத நிலையில் 14.12.2020ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் புதிய சங்கதிகளை குறிப்பிட்டு அதன் அடிப்படையில் வண்டித்தட பாத்தியத்தை மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ளதாகவும், ஆவணங்களின் அடிப்படையிலோ, வசதியுரிமை அடிப்படையிலோ மனுதாரர்கள் / வாதிகளுக்கு தாவா வண்டித்தடத்தில் எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் மனுதாரர்கள் / வாதிகள் R.S.255 மற்றும் R.S.254 ஆகிய காலைகள் ஒரு ரமேஷ் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படி ரமேஷ் என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், தாவா வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆவணங்களின் அடிப்படையிலோ, வசதியுரிமையின் அடிப்படையிலோ எவ்வித உரிமையும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

12) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா வண்டித்தடத்தினை தவிர்த்து மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு வேறு பாதை இல்லை என்று கூறியுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாவா வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

13) மேற்படி ம.சா.ஆ.1 மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரின் பெயரிலுள்ள 01.09.1995ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும் போது திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு வட்டம், பொள்ளாச்சி வட்டம் கோமங்கலம் புதூர் கிராமம், க.ச.322 நெ. காலை பு.ஏ.8.59க்கு தரம் ரூ.6.96 இதில் க.ச.321 நெ. காலைக்கும் தெற்கு க.ச.322/2 நெ. காலை பி.ஏ.பி.

கிளைவாய்க்காலுக்கும் வடக்கு க.ச.254 நெ. காலைக்கும் மேற்கு க.ச.323 நெ. காலைக்கும் கிழக்கு இதன் மத்தியில் பு.ஏ.4.05 ஷை பூமிக்குண்டான மாமூல் வண்டித்தடங்களிலும் நடதடங்களிலும் உங்களுடைய வண்டித்தடங்களில் நடை ஜனங்கள், கோட்டேர் வாகனங்கள், வகையரா போக்குவரத்து செய்து கொள்ளும் வண்டித்தடம் நடதடம் பாத்தியங்கள் மாமூல்படி கட்டுப்பட்டது என்றும், தடபாத்திய மதிப்பு ரூ.250/− என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

14) ம.சா.ஆ.2 1ம் மனுதாரர் / 1ம் வாதியின் பெயரிலுள்ள 05.02.2003ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும் போது, க.ச.254/1 நெ. காலை பு.ஹெக்.ஏர்ஸ்.4.74.0க்கு பு.ஏ.11.71க்கு தீர்வை ரூ.13.12 இதில் ராமச்சந்திரன் பூமிக்கும் தெற்கு ரங்கசாமி பூமிக்கு வடக்கு ராஜ்நாயுடு பூமிக்கும் பி.ஏ.பி வாய்காலுக்கும் கிழக்கு நடராஜ்கவுண்டர் பூமிக்கும் மேற்கு இதன் மத்தியில் பு.ஏ.4.00க்கு தீர்வை ரூ.4.48 ஷை பங்கில் உள்ள துருஸ்து கிணர் 1ம் ஷை கிணற்றில் எஸ்.சி.நெ.257ன்படி வைத்துள்ள 5 எச்.பி மின்மோட்டார் பம்ப்செட் 1ம் மின் இணைப்பும் மின் உபகரங்களும் அதன் டெபாசிட் தொகையும் ஷை பூமியில் உள்ள 22 வரிசைத் தென்னை மரங்களும் சகிதம் ஷை பூமி புன்செய் தோட்டபூமியாகும் இந்த பூமியும் ஷை பூமிக்கு மாமூலாகப் பாயும் பி.ஏ.பி பாசம் சம்பந்தப்பட்ட சகலவிதமான பாத்தியங்களும் மாமூல் படியும் மேற்படி பூமிக்கு ஜனங்கள் கால்நடைகள் கோட்டேர் வண்டி லாரி டிரேக்டர் மற்றும் அதன் டிரெய்லர் போன்ற வாகனங்கள் போகவர உள்ள தடபாத்தியம் மாமூல்படியும் சகிதம் என்றும், தடபாத்திய மதிப்பு ரூ.200/− என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

15) ம.சா.ஆ.3 14.12.2020ம் தேதியிட்ட பாகசாசனத்தை பரிசீலிக்கும்போது க.ச.322/1 பூமிக்குண்டான PAP பாசன பாத்தியமும் மாமூல் PAP மடை அரணி வாய்க்கால் பாத்தியங்களும் மேற்படி பூமிக்கு உண்டான மாமூல் தடத்தில் ஆட்கள், கால்நடைகள், பொருட்கள், கருவிகள், வண்டி கோட்டேர் வாகனாதிகள் வகையரா சகிதம் போகவர போக்குவரத்து செய்து கொள்ளும் தட பாத்தியமும்

மாமூல்படியும் சகிதம் என்றும், தடபாத்திய மதிப்பு ரூ.800/- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

16) ம.சா.ஆ.4 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மகனான ரமேஷ் என்பவரின் 02.09.2011ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பரிசீலிக்கும்போது க.ச.255 பூமிக்குண்டான PAP பாசன பாத்தியமும் மாமூல் PAP மடை அரணி வாய்க்கால் பாத்தியங்களும் மேற்படி பூமிகளின் வடபுரமுள்ள மாமூல் புறம்போக்கு இட்டேரியின் வழியாக ஆட்கள், கால்நடைகள், பொருட்கள், சகலவிதமான வாகனாதிகள் சகிதம் போகவர போக்குவரத்து செய்து கொள்ளும் மாமூல் தட பாத்தியமும் மேற்கண்ட சொத்துக்களுக்கு சகல மூல ஆவணங்களின்படியும் மற்றும் மாமூல்படியும் உள்ள சகலவிதமான பாத்தியங்களும் சகிதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

17) மேற்படி ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆவணங்கள் அனைத்திலும் மாமூல் தடபாத்தியங்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணங்களில் மேற்படி தடப்பாத்தியம் மதிப்பிடப்பட்டு அதனை பயன்படுத்தி தாவா சொத்துக்களுக்கு செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18) மேலும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மனுச்சொத்தானது பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம்புதூர் கிராமத்தில் அமைந்துள்ளது. பொள்ளாச்சி to உடுமலை ரோட்டிலிருந்து பிரிநது ஒரு தார்ரோடு கோமங்கலம்புதூரிலிருந்து சங்கம்பாளையம் செல்கிறது. அந்த தார்சாலையில் இருந்து மேற்கு நோக்கி ஒரு வண்டிப்பாதை செல்கிறது. அப்பாதையானது நேர்மேற்கே சென்று பின் இரண்டாக பிரிந்து மனுவாதிகள், எதிர்மனுவாதிகள் பூமிக்கு தெற்கேயும், மூன்றாம் நபர்கள் பூமிக்கு வடக்கேயும் செல்கிறது. மேற்படி மனுவாதிகள், எதிர்மனுவாதிகள் பூமிக்கு செல்லும் வண்டிப்பாதையை தடுத்து தென்னை ஓலைகள் போடப்பட்டிருந்தது. அந்த வண்டிப்பாதையில் சென்றால் வண்டிப்பாதையை ஒட்டி மேபுரமாக கம்பிவேலி

போடப்பட்டிருந்தது. கிழபுறமாக 1ம் எதிர்மனுவாதியின் பூமி தென்னந்தோப்பாக பயன்படுத்தியது போல் இருந்தது. மனுவாதிகள், எதிர்மனுவாதிகள் பூமிக்கு சிறிது தூரம் சென்றவுடன் 1ம் எதிர்மனுவாதியின் கிணறு இருந்தது அதை அடுத்து மரத்தடியில் கோவில் இரண்டு அருகருகே இருந்தது. அதை தாண்டி சென்றால் வண்டிப்பாதையின் மேபுரமாக மனுவாதிகள் பூமி இருந்தது. அந்த வண்டிப்பாதையில் சிறிது தூரம் சென்றவுடன் 4ம் எதிர்மனுவாதி பங்கஜம் அவர்களது பூமியை அடைகிறது. அத்துடன் அந்த வண்டிப்பாதை முடிவடைகிறது. பங்கஜம் பூமியை அடுத்து, செல்வராஜ் பத்மாவதி பூமி உள்ளது. அதை அடுத்து P.A.P. வாய்க்கால் கிழக்கிலிருந்து மேற்காக செல்கிறது. மேற்படி வாய்க்காலில் மனுவாதிகள் பூமியின் தென்கோ'டில் மடை ஒன்று இருந்தது அந்த மடையிலிருந்து மேற்கே மனுவாதி பூமிக்கு செல்லும் வாய்க்கால் இருந்தது. மனுவாதிகள் பூமியின் தென்மேற்கு மூலையில் தென்னங்கன்றுகள் நடப்பட்டிருந்தது. மேற்படி மனுவாதியின் பூமியின் நடுவே மக்காச்சோள தட்டுகளை அடுக்கி போர் போடப்பட்டிருந்தது. அதனருகே மக்காச்சோளக்கதிர்கள் அறுவடை செய்து அவைகள் பூமியில் குவித்து தார்பாய் போட்டு மூடப்பட்டிருந்தது. மக்காச்சோள கதிர்கள் மூடப்பட்டிருந்த பகுதி வரைபடத்தில் சிவப்பு நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது. மக்காச்சோளக் கதிர்களுக்கு மேலும் மக்காச்சோள தட்டுகள் போட்டு மூடப்பட்டிருந்தது. மனுவாதி பூமியின் வடக்கு பகுதியில் கம்பிவேலி அமைக்கப்பட்டிருந்து. வடகிழக்கு மூலையில் மனுவாதிகள் பூமியில் கிணறு இருந்தது. அதனருகே வீடுபோன்ற செட் ஒன்று இருந்தது. மனுவாதி பூமி உழவு செய்யப்பட்டிருந்தது. மனுவாதிகள் பூமிக்கு வடபுரம் மூன்றாம் நபரின் தென்னந்தோப்பு இருந்தது. மனுவாதிகள் பூமிக்கு செல்லும் வண்டிப்பாதை வரைபடத்தில் ப்ரவுன் நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது. மனுவாதி பூமி வரைபடத்தில் பச்சை நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது. P.A.P. வாய்க்கால் வரைபடத்தில் நீல நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது" என்று

குறிப்பிடப்பட்டுள்ளது.

19) மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களிலிருந்து க.ச.எண்.322/1, 254/1, 255 காலைகளுக்கு மாமூல் தட பாத்திய உரிமையுள்ளது என்பது தெரிய வருகிறது.

20) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் மாமூல் தடப்பாத்தியம் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தாவா வண்டித்தடத்திற்கும், மேற்படி மாமூல் தடப்பாத்தியத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

21) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் பரிசீலனையிலிருந்து தாவா வண்டிப்பாதை மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் பூமிகளின் வழியாக செல்கிறது என்பது தெரிய வருகிறது. மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா வண்டித்தடம் தான் மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்குண்டான மாமூல் வண்டித்தடம் என்று கூறப்பட்டுள்ளது.

22) மனுதாரர்கள் / வாதிகளின் தகப்பனாரான சின்னச்சாமியின் ம.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் அவரது முன்பாத்தியஸ்தர்கள் மாமூல் தடபாத்திய உரிமையை வழங்கியுள்ளனர். அதன் அடிப்படையிலேயே ம.சா.ஆ.3 பாக ஆவணம் மனுதாரர்கள் / வாதிகளின் குடும்பத்தினருக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

23) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாவா வண்டித்தடம் மேற்படி மாமூல் வண்டித்தடம் இல்லை என்று கூறப்பட்டுள்ள நிலையில் தாவா வண்டித்தடத்தை தவிர்த்து வேறு மாமூலான வண்டித்தடம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு உள்ளதா, இல்லையா என்பது பற்றி வழக்கில் உபயதரப்பினர்களாலும் முன்னிறுத்தப்படும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்

மூலமாக தான் தெளிவுப்படுத்திக் கொள்ள இயலும்.

24) தாவா வண்டித்தடத்தினை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களின்படி மனுதாரர்கள் / வாதிகளின் முன்பாத்தியஸ்தர்களும், மனுதாரர்கள் / வாதிகளும் 1995ம் வருடத்திலிருந்து அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் மேற்படி வண்டித்தடத்தினை பயன்படுத்தும் வசதியுரிமை மனுதாரர்கள் / வாதிகளுக்கு உள்ளது என்று தெரிய வருகிறது.

25) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கையிலிருந்து மனுதாரர்கள் / வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் விளைபொருட்களான மக்கச்சோள கதிர்களை கொண்டு செல்ல இயலாமல் தட்டுகள் போட்டு மூடப்பட்டுள்ளது என்பது மனுதாரர்கள் / வாதிகளால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்டசமன் நோக்கும் எழுந்துள்ளதாக தெரிய வருகிறது.

26) மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடத்தினை தவிர அவர்களது சொத்திற்கு செல்வதற்கு வேறு வண்டித்தடம் எதுவும் இல்லை என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வண்டித்தடத்தினை பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இடையூறு செய்யும் பட்சத்தில் அது மனுதாரர்கள் / வாதிகளுக்கு ஈடு செய்ய இயலா இழப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் தாவா வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்கள் / வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

27) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, தாவா வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜீன் மாதம் 23ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.23 17:26:30 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.09.1995 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.2 | 05.02.2013 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.3 | 14.12.2020 | பாகசாசன பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.4 | 02.09.2011 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.5 | 05.03.2021 | பட்டா எண்.383−க்கான கணினி வழி பட்டா |
| ம.சா.ஆ.6 | − | ரீ−சர்வே பதிவேடு |
| ம.சா.ஆ.7 | − | 'அ' பதிவேடு |
| ம.சா.ஆ.8 | − | மாதிரி வரைபடம் |
| ம.சா.ஆ.9 | 05.03.2021 | 1ம் மனுதாரர் / 1ம் வாதி காவல்துறை ஆய்வாளரிடம் புகார் தெரிவித்ததற்கான மனு |
| ம.சா.ஆ.10 | 08.03.2021 | மேற்படி புகாரினை ஏற்றுக்கொண்டதற்கான புகார் ஏற்பு ரசீது |
| ம.சா.ஆ.11 | 26.03.2021 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 1ம் |

| | | |
|---|---|---|
| | | மனுதாரர் / 1ம் வாதிக்கு காவல்துறை ஆய்வாளர் தெரிவித்த விபரம் |

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 03.03.1970 | பாகசாசன பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 02.09.2011 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 04.05.2021 | புல வரைபடம் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | – | நீதிமன்ற ஆணையர் வரைபடம் |

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.23 17:26:43 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.133/2021 இல் இ.ம.எண்.02/2021

நாள் : 23.06.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---------------------------------